மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பே சொன்னதுபோல், துரிதப்படுத்தச் சொல்கிறேன்.

திரு வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே, இந்த மதிய உணவுத் திட்டத்தை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஜோலார்பேட்டைக்கு குடிநீர் வழங்கும் திட்டம் பற்றிய கேள்வி.

சிவகங்கைப் பகுதியிலுள்ள நெட்டூர் கண்மாய்.

*வினா எண் 86—திரு செ. சிவசாமி: மாண்புமிகு நீர்ப்பாசன துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் சிவகங்கை டிவிஷனில் உள்ள நெட்டூர் கண்மாய் வெட்டு மராமத்து இல்லாமலும் கரைகள் பலப்படுத்தப்படாமலும் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றி என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, சிவகங்கை டிவிஷனில் உள்ள நெட்டூர் கண்மாய் கிட்டத்தட்ட 3,000 ஏக்கர் பாசனத்திற்கு உதவி செய்யக்கூடிய மிகப் பெரிய கண்மாய் ஆகும். அந்தக் கண்மாயில் ஒரு தடவை இயற்கையின் மூலம் தண்ணீர் நிரம்பிவிட்டால் ஒரு போகம் தாராளமாகப் பயிர் செய்வதற்குப் பயன்படக்கூடிய கண்மாய். அந்தக் கண்மாய் நீண்ட நாட்களாகச் சரியான முறையில் ரிப்பேர் செய்யப் படாமல் இருந்து கொண்டிருக்கிறது. தற்பொழுது நவீனப் படுத்தும் முறையிலே, உலக வங்கியிலிருந்து பெறக்கூடிய நிதியிலிருந்து அந்தக் கண்மாயை நவீனப் படுத்துவதற்கு எற்பாடு செய்யப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிரு திரு கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே உலக வங்கியினுடைய நிதி உதவி பெற்று கண்மாய்களைப் பராமரிக்கின்ற பணிகள் இன்னும் செயல்வடிவிற்கு வரவில்லை. ஆனால் இந்த நெட்டூர் கண்மாயைப் பொறுத்த வரையிலே, மடைகள் எண் 2, 5 ஆகியவைகள்தான் பழுதடைந்திருந்தன. அவை மார

1980 ஜூலை 31]

மத்து செய்யப் பட்டுவிட்ட காரணத்தினாலே, தற்பொழுது கரைகளைப் பலப்படுத்த வேண்டிய சூழ்நிலையில்லாத வகையில் நன்றாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு செ. சிவசாமி: தலைவரவர்களே, அந்தக் கண்மாயினுடைய தண்ணீர் கொள்ளளவை அதிகப்படுத்தும் முறையிலே 'சில்ட் கிளியரன்ஸ்' செய்யப்படுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: தலைவரவர்களே, கரைக்கு ஆபத்து ஏற்படக் கூடிய அளவுக்கு நீர்ப்பெருக்கு சமீப காலத்திலே இருந்திருக்கிறது. எனவே, இனிமேல் கரை உடையாத அளவு இரண்டு மடைகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு, ஒரு வேளை, நீர்ப்பிடிப்புகளுடைய பரப்பளவை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்குமானால், அரசு அது பற்றி பரிசீலிக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, நெட்டூர் கண்மாயைப் பொறுத்தவரையிலே, டி.டி.சி. கூட்டத்திலே மதிப்பிற்குரிய மாண்புமிகு சிவசாமி அவர்கள் எழுப்பினார்கள். அதற்கு அங்கு சால்ஜாப்பு பதில்தான் சொல்லப்பட்டது. இது பெரிய கண்மாய். அந்தக் கண்மாயை ஒழுங்காகப் பராமரிக்க வேண்டுமென்றால், ஒன்று அதன் கரைகளைப் பலப்படுத்த வேண்டும், இன்னொன்று கண்மாயை ஆழப்படுத்துவதவசியம். ஆகவே ஆழப்படுத்தி, தண்ணீர் கொள்ளளவை அதிகப் படுத்த வேண்டுமென்று கேட்கிற நேரத்திலே, அங்கு மடைகள், கலுங்குகள் பெரும் ஆழத்திலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டும் இன்னும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது அரசினுடைய கவனத்திற்கு வந்துள்ளதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, கரையைப் பழுது பார்ப்பது பற்றித்தான் இங்கே கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது. 'கரைகள் பலப்படுத்தப்படாமல் இருப்பது உண்மையா' என்ற மூலக் கேள்விக்குத்தான் நான் பதில் சொல்லி இருக்கிறேன். இரண்டு மடைகள் இருந்த பகுதியிலேதான் சேதாரம் இருந்தது. அவை சரிசெய்யப்பட்ட காரணத்தினாலே கரைகள் இப்பொழுது பலமாக இருக்கின்றன. கண்மாயை ஆழப்படுத்த வேண்டும். கலுங்குகளை ஆழப்படுத்துவதிலே பிரச்னை இல்லாமல் இருக்குமானால். அதையெல்லாம் எப்பொழுது செயல்படுத்துவீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது கேட்கிறார்கள். அதற்கு தனிக் கேள்வி போட வேண்டும், இல்லையென்றால், இதையே குறிப்பாக வைத்துக்கொண்டு மேலும் நடவடிக்கை எடுக்க நாங்கள் முயற்சி செய்வோம்.